திருநெல்வேலி மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்: திரு.மு.கணேசன்,B.Sc.,B.L.

ந.க.அ1/749/2024 நாள்: 30.04.2024

பொருள்: பொதுப்பணி – நிலஅளவை பதிவேடுகள் துறை, திருநெல்வேலி மாவட்டம் – காலஞ்சென்ற புல உதவியாளர் கே.கணேஷ், என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.க.டேனி கிருபாகரன். என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசுக் கடித (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (Q–1) துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.108, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 11.03.2022.
3. அரசாணை (நிலை) எண் 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, நாள் 08.03.2023.
4. சென்னை, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் கடிதம் எண் ந.க.ர1/10355/2023(நி.அ) நாள் 16.05.2023
5. திருநெல்வேலி மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் செயல்முறை ஆணை ந.க.அ1/2823/2023, நாள் 26.06.2023.
6. திருநெல்வேலி மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் கடிதம் ந.க.அ1/2823/2023, நாள் 07.08.2023 (சென்னை, நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநருக்கு முகவரியிட்டது).
7. அரசு கடித எண் 5532/G2/2023–1, மனிதவள மேலாண்மைத் (G2) துறை, நாள் 20.09.2023.
8. அரசுக் கடிதம் 1(டி) எண் 64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பணிகள் அலகு பணி–9(2), பிரிவு நாள் 18.01.2024.
9. சென்னை, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் கடிதம் எண் ந.க.ர1/20202/2023, நாள் 04.02.2024.

----------

ஆணை

தென்காசி மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறையில் புலஉதவியாளராக பணியாற்றி பணியிலிருக்கும் போது 26.10.2020 அன்று காலஞ்சென்ற கே.கணேஷ், என்பவரின் வாரிசுதாரரும், மகனுமான திரு.க.டேனி கிருபாகரன் என்பவருக்கு பார்வை (4)ல் கண்டுள்ள ஆணையின்படி, இளநிலை உதவியாளராக நியமனம் வழங்க ஆணை பெறப்பட்டதை தொடர்ந்து, பார்வை (5)ன் படி திரு.க.டேனி கிருபாகரன் என்பவருக்கு தற்காலிக இளநிலை உதவியாளராக நியமனம் வழங்கப்பட்டு தனியர் 26.06.2023 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியேற்றுள்ளார்.

த.பி.பா...

தனியருக்கு இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்ய பிரேரணை பார்வை (6)இன் படி, சென்னை நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநருக்கு அனுப்பப்பட்டது.

பார்வை (9)ல் கண்டுள்ள நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் கடிதத்தில் பார்வை (3), (7) முதல் (9) முடிய உள்ள அரசாணை மற்றும் அரசு கடித வழிகாட்டுதலின்படி திரு.க.டேனி கிருபாகரன் என்பவரின் பணியை இளநிலை உதவியாளர் இனத்தில் பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை மற்றும் அரசுக் கடிதம் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதன்படி, இவ்வலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.க.டேனி கிருபாகரன் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 26.06.2023 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

(ஒ.ம்)மு.கணேசன்,
உதவி இயக்குநர்

உண்மை நகல் / உத்தரவுப்படி

30/4/24

கண்காணிப்பாளர்

30/4/2024

பெறுநர்

திரு.க.டேனி கிருபாகரன்,
இளநிலை உதவியாளர்
(வழி)-கண்காணிப்பாளர் 1

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:

1. இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை-5
2. மண்டல துணை இயக்குநர், நிலஅளவை பதிவேடுகள் துறை, மதுரை

நகல்: ஆ1, ஆ2 இருக்கைகளுக்கு புதிய எண்ணில்

நகல்: அறிவிப்பு பலகை